**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 138/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | வெங்கடேசன் |
| Father's Name/Husband Name: | ரெங்கசாமி |
| Village : | பாண்டகபாடி |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 34 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.05.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்.)**

**சாட்சியானவர் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது முதல் விசாரணையில் கூறியது போல் "நான் வீட்டிற்கு அழைத்து வரும்போது என் அக்கா அழுது கொண்டிருந்தார் அவரிடம் என்ன நடந்தது என்று சொல்லி கேட்டேன் அதற்கு என் அக்கா சுந்தரம் செருப்பு கழட்டி அடித்ததாகவும், எதிரி சுந்தரமும், பொன்னுசாமியும் தேவிடியா புண்டை நீ எல்லாம் எதற்கு உயிரோடு இருக்க செத்துற வேண்டி தானே, ஊர் மேஞ்சி காச கட்ட வேண்டியது தானே என்று பேசியதாகவும் எதிரி பொன்னுசாமி மகன் செருப்ப கழட்டி அடிச்சதாகவும் சொன்னார்" என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். மேலும் சம்பவம் நடந்த அன்றைய தினமே போலிசாரிடம் சம்பவ இடத்தை அடையாளம் காட்டினேன் என்று எனது முதல் விசாரணையில் சொல்லிய விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

சம்பவம் நடந்த மறுநாள் சம்பவ இடம் வந்து விசாரணை செய்தார்கள் என்றும் சம்பவம் நடந்த பிறகு 02.07.2024 அன்று காலை 10 மணிக்கு மருத்துவமனையில் ஒரு கையெழுத்து போட்டேன் என்றும் எனது போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னிடம் எத்தனை கையொப்பம் வாங்ககினார்கள் மருத்துவமனையில் ஒரு கையொப்பம் வாங்கினார்கள். பின்னர் வடகரையில் ஒரு கையொப்பம் வாங்கினார்கள். வெற்றுத்தாளில் வாங்கனிர்களா அல்லது எழுதிய தாளில் வாங்கனிர்களா என்றால் எழுதிய தாளில் தான் வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். போலிசார் சம்பவ இடமான பெரிய வடகரைக்கு வரும்போது அங்கு பொது மக்கள் கூட்டம் இருந்ததா என்றால் பிரச்சனை முடிந்த பிறகு தான் போலிசார் வந்தார்கள் போலிசார் வரும் போது கூட்டம் இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் நான் போட்ட இரண்டு கையொப்பமும் வெற்றுத்தாளில் காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன் என்றால் சரியல்ல.

புகார்தாரரான ருக்குமணி ஏலச் சீட்டு பணத்தை ஏமாற்றுவதற்கா எதிரிகளின் மீது கொடுத்த பொய் புகாருக்கு ஆதராவாகவும் புகார் தாரர் எனது அக்கா என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.